**08.01.2020**

# பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் 3 நாள் சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழா

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழா இந்த ஆண்டு ஜனவரி 9, 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் தினந்தோறும் மாலை 5.45 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறுகிறது. தஞ்சையில் உள்ள தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளோடு கொண்டாடப்படவுள்ள இவ்விழா சைதாப்பேட்டை, சென்ட்ரல் மற்றும் திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறவுள்ளது.

**முதல் நாள் நிகழ்வு:**

09.01.2020 வியாழக்கிழமை அன்று சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த திரு.சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்களி மற்றும் ஒப்பனா நடனம் கலைநிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவைச் சேர்ந்த திரு.பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. அன்றிரவு 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

**இரண்டாம் நாள் நிகழ்வு:**

10.01.2020 வெள்ளிக்கிழமை அன்று சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த திரு.சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்களி மற்றும் ஒப்பனா நடனம் கலைநிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவைச் சேர்ந்த திரு.பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. அன்றிரவு 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்வு:**

11.01.2020 சனிக்கிழமை அன்று திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த திரு.சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்களி மற்றும் ஒப்பனா நடனம் கலைநிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவைச் சேர்ந்த திரு.பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. அன்றிரவு 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

மூன்று நாள் பொங்கல் கலைவிழா நிகழ்வுகளையும் பொதுமக்கள் கண்டு மகிழ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அனைவருக்கும் அனுமதி இலவசம். எனவே, மெட்ரோ இரயில் பயணியர், பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் இப்பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.